## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினதும், (''அதிகாரசபை'') அதன் துணைக் கம்பனியினதும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கு உரித்தான குறிப்புகள், பொழிப்பாக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் *(கம்பனிகளிற்கு பொருத்தமற்றது)* என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் மூலம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 – நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | நியமத்தின் 29(அ) பந்தி மற்றும் அத்தியாயத்தில் விபரிக்கப்பட்டுள்ளவாறு நிதி அறிக்கையிடலில் தரத்தன்மை அடையாளங் களின் படி நம்பிக்கையான தகவல்கள் பொருண்மையானதாகவும் பக்கச்சார்பின்றியும் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபை உத்தியோகத்தர் களால் மேற்கொள்ளப் பட்ட மோசடிகளுக்கு உரித்தாக அறவிடப்பட வேண்டிய ரூபா 5.82 மில்லியன் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை. | காலி, நுவரெலியா, களுத்துறைக்கு உரிய ரூபா 3.321 மில்லியன் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் நம்பிக்கையான தகவல்களை வெளிப்படுத்த வேண்டும். |
| (ii) | நியமத்தில் பொதுத்துறை நிறுவனங்களால் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய படிவங்களை அறிமுகப்படுத்தியிருந்த போதிலும், அதிகாரசபையால் இதற்கு இணங்க 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றின் வருமானமும் செலவினங்களும் வகைப் படுத்திக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 நிதிக்கூற்றுக்கள் சரியான வடிவத்தில் தயாரிக்கப்படும். | நியமத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட வடிவமைப்பின் படி இது தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 – ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**<br>நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் ஆகக்குறைந்தது ஆண்டிற்கு ஒரு தடவை மீளாய்வு செய்யப்பட்டு எதிர்பார்த்த தரத்தில் மாற்றங்கள் காணப்படுமாயின் அந்த வேறுபாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 – கணக்கீட்டுக் கொள்கையில் கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் தவறுகளின் படி கணக்கீடு மதிப்பீட்டு வேறுபாடாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபை இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிராததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் பூச்சியப் பெறுமதியைக் கொண்டுள்ள நிலையான சொத்துக்களின் கிரயம் ரூபா 274.11 மில்லியனாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 41 இன் படி கிரய மாதிரியில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. | நியமத்தின் படி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு செய்யப்பட வேண்டும் |
| (இ) | **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 8 – நிதி ஏற்பாடு, நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்**,<br>47 ஆம் பந்தியின் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்புக்கள் இனங்காணப்பட்டு அதில் 60 சதவீதம் அல்லது 90 சதவீத அளவு நிதி ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். எனினும் | 2024 ஆம் ஆண்டு முதல் நிகழத்தக்க பொறுப்புக் களின் தன்மையின் படி 20 சதவீதம் வரை அதிகரிப் பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நியமத்திற்கு இணங்க நிகழத்தக்க பொறுப்புக்களுக்காக போதியளவான ஏற்பாடு மேற் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகார சபையின் கணக்கீட்டுக் கொள்கை 8.1 இல ` குறிப்பிடப்பட்டவாறு அதிகார சபைக்கு எதிராக வெளித்தரப்பினரால் நீதிமன்றங்களில் தொடரப்பட்ட 26 வழக்குகள் தொடர்பாக நிகழத்தக்க இழப்பீடாக இனங்காணப்பட்ட ரூபா 2,616.5 மில்லியன் தொகையில் பத்து சதவீதம் மாத்திரம் நிகழத்தக்க பொறுப்புக்களுக்காக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 9 – இருப்பு அதிகாரசபை வீடமைப்பு நோக்கத்திற்காக கையகப்படுத்தப்பட்ட காணியை மேம்படுத்துவதற்காக ஏற்கப்பட்ட கிரயமாக ரூபா 1,090 மில்லியன் அபிவிருத்தி சொத்துக்களாகக் கணக்கிடப்பட்டிருந்ததுடன் நியமத்தின் 47 ஆம் பந்தியின் படி அந்த செலவினம் தொடர்பாக பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | காணியை மேம்படுத்து வதற்கான செலவினம் காணி விற்பனை செய்யப்படுகையில் அறவிடப்படுதால் அபிவிருத்திச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | நியமத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 10 – பெறுமதி மாற்றல் கொடுக்கல் வாங்கல்களில் எழுந்த வருவாய்.** | நியமம் 10 இன் 34 இன் படி ஆம் உடன் படிக்கையிடப்பட்ட வட்டி வருவாயாக இனங்காணப்பட்டுள்ளது. | நியமத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய வீட்டுக் கடன் தவணை மற்றும் வட்டி வருமானம் கண்டறியப்பட வேண்டும். |
| (i) | நியமத்தின் 16 ஆவது பந்தியின் படி அதிகாரசபையால் ரூபா 791.99 மில்லியன் தொகையான தவணைக் கடன் வட்டி வருமானத்தின் நியாயப் பெறுமதியையும் பெயரளவுப் பெறுமதியையும் இனங்கண்டிராததுடன் நியமத்தின் 33 ஆம் 34 ஆம் பந்திகளின் படி அப் பெறுமதிகளுக்கிடையேயான வேறுபாட்டைக் கண்டறியாது கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ii) | நியமத்தின் 34(அ) பந்தியின் படி, அதிகாரசபையால் திறைசேரியின் உண்டியல்களிற்கான வட்டி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கணிப்பிடப்படாது திறைசேரியின் உண்டியல்கள் முதிர்வடையும் திகதியில் கிடைக்கப்பெற்ற மொத்த வட்டியும் வருமானமாகக் கணிப்பிடப்பட்டிருந்தது. இதன் படி, 2022 ஆம் ஆண்டின் போது உண்டியல்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீடுகளுக்கான வட்டி வருமானம் 2023 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்டுள்ளமையால் 2023 ஆம் ஆண்டிற்கு உரித்தான திறைசேரி உண்டியல் வட்டி ரூபா 18.14 ஆல் மிகைக் கணிப்பீடிடப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் போது சீராக்கப்படும். | நியமத்தின் படி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் குறித்த சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ஊ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் மாற்றல்கள் அல்லாத கொடுக்கல்கள் | குறிப்பு இல. 37 இல் திறைசேரியால் | பொதுத்துறை கணக்கீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | வாங்கல்களுக்கான வருவாய், 44 ஆம் பந்தியில் காணப்பிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்து மீளாய்வாண்டின் போது அதிகார சபைக்கு கிடைத்த ரூபா 1,319 மில்லியன் அரசாங்க மானியம், வருவாயாக இனங்காணப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு இனங்காணப்படாது ஒதுக்கத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | வழங்கப்பட்ட தொகை வருவாயாக கணக்கிடப்பட்டுள்ளது. | நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (எ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 12 குத்தகை தொடர்பான வெளிப்படுத்தல்கள், 59 ஆவது பந்தியின் படி, குத்தகை கொடுப்பனவாளர்கள் நிதிக்கூற்றுக்களில் நிதிக் குத்தகை தொடர்பாக வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையால் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த மாடி வீடுகளின் ரூபா 82.41 மில்லியன் பெறுமதி நிதிக் குத்தகையாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள மாடி வீடுகளின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கிடப்பட்டுள்ளதுடன் இவை குறித்த குடியிருப்பாளர்களுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நிதிக்குத்தகையாகக் கருதப்படவில்லை. | நியமத்தின் படி நிதிக்குத்தகை வழங்கப்படுகையில் குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள் சரியாக இனங்காணப்பட வேண்டும் |
| (ஏ) | **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 13 – முதலீட்டு ஆதனங்கள்** நியமத்தின் 7 ஆவது பந்தியின் பிரகாரம் அதிகாரசபையிடம் உள்ள வாடகை/குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள ரூபா 912.37 மில்லியன் பெறுமதியான கட்டிடங்கள் முதலீட்டு ஆதனமாகக் கருதப்படாது காணி கட்டிடங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், விற்பனை செய்யப்படும் நோக்கில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 29.25 மில்லியன் பெறுமதியான வீடுகள் நியமத்தின் 44 ஆம் பிரிவின் படி, முதலீட்டுச் சொத்தாகக் காண்பிக்கப்பட்டிராததுடன் வாடகை/ குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 142 கடைகளின் கிரயம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்கள் மதிப்பிடப்பட்டதை அடுத்து புதிய மதிப்பீட்டுப் பெறுமதி 2024 ஆம் ஆண்டின் போது கணக்கிடப்படும். | நியத்திற்கு இணங்க முதலீட்டு ஆதனங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 14 – தொடர்புடைய தரப்பினர்களை வெளிப்படுத்துதல், 16 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகார சபையால் தொடர்புடைய தரப்பினர் தொடர்பாக வெளிப்படுத்த வேண்டிய போதியளவான தகவல்கள் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | குறிப்பு இல. 17.5 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | நியமத்திற்கு இணங்க தொடர்புடைய தரப்பினர் மற்றும் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக தேவையான வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டும். |
| (ஒ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 17 – பொருட்கள் அறிக்கையிடலின் 9 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகாரசபைக்குத் தனியாக இனங்காணக்கூடிய வீடுகள் விற்பனை, காணிகளின் விற்பனை மற்றும் குத்தகைக்கு வழங்குதல், வீட்டுக் கடன் வழங்குதல், வீடமைப்பு செயற்திட்டங்களை அமுற்படுத்துதல், சேவை பங்களிப்பாளர் செயற்திட்டங்கள் போன்ற செயற்பாடுகளைத் தனித்தனியாக இனங்கண்டு செயலாற்றல் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்கள் வேறாகக் காண்பிக்கப்படக் கூடிய செயற்பணிகளை இனங்கண்டு வாடகை வருமானம், வட்டி வருமானம் மற்றும் ஏனைய வருமானங்களாக நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் குறிப்புகளில் தெளிவான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. | தனியாக இனங்காணப்படக் கூடிய பகுதிகளை இனங்கண்டு செயலாற்றலை தனியாக மதிப்பிடுவதன் மூலம் துறைசார் பணிகளின் செயற்திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் கணக்கீட்டு கொள்கை குறிப்பு இல. 13 இன் படி பணம் செலுத்தப்படாது வீடுகளை நிர்மாணிக்கும் நோக்கில் அரச காணிகளை கைப்பற்றும் போது காணியின் சந்தைபட பெறுமதிக்கு மதிப்பீடு செய்து அதற்கான அடிப்படை செலவுகளை சீராக்கியதை அடுத்து ஒதுக்கக் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டிய போதிலும் ஒதுக்கமாக இனங்கண்டு கணக்கிடப்பட வேண்டிய 2013 ஆம் ஆண்டின் பின்னர் கையேற்கப்பட்டிருந்த 781 ஏக்கர் 2 ரூட் 20.7 பேர்ச் கணக்கிடப்பட்டிருக்க வில்லை. | மதிப்பீடு செய்ய அதிக செலவாகுவதால் பகுதி பகுதியாக மதிப்பீடு செய்து 2024 கணக்குகளில் நியாயப் பெறுமதியில் காண்பிக்கப்படும். | கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது காசுப்பாய்ச்சல் கூற்றில் செயல்பாடுகள், முதலீடுகள் மற்றும் நிதி நடவடிக்கைகளின் கீழ் உருவாக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சலில் ஆதன, பொறி, உபகரணங்களின் பெறுமானத்தேய்வு ரூபா 0.670 மில்லியன் குறைவாகவும் மானியப் பெறுவனவு ரூபா 1,918.11 மில்லியன் அதிகமாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூறறு சரியாகத் தயாரிக்கப்பட்டு மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | காசுப்பாய்ச்சல் கூறறில் உள்ள காசுப்பாய்ச்சல்கள் சரியாக இனங்காணப்பட வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டு களுத்துறை மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்ற நிதி மோசடியில் ஈடுபட்டவர்களிடம் இருந்து அவ் ஆண்டின் போது ரூபா 1.59 மில்லியன் அறவிடப்பட்டிருந்ததுடன் அப் பணத்தைச் செலுத்திய பயனாளிகளின் கணக்குகளில் சீராக்கம் செய்யப்படாது மீளாய்வாண்டின் போது அத் தொகை கடன்கொடுத்தோராகக் கணக்கிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக, கடன்கொடுத்தோர் மீதியும் கடன்பட்டோர் மீதியும் அத் தொகையால் அதிகமாகக் கணக்கிடப்பட்டிருந்தது. | மோசடிகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் முடியும் வரை சீராக்கப்பட இயலாமையால் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கிடப்பட்டுள்ளது. | அறவிடப்பட்டுள்ள தொகையை பகுப்பாய்வு செய்து கடன்பட்டோர் மீதிகளில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 1987 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை, அதிகாரசபையால் செயல்படுத்தப்பட்ட பல்வேறு வீட்டுத் திட்டங்கள் மற்றும் பிற நடவடிக்கைகளுக்காக பிற நிறுவனங்களால் வழங்கப்பட்டிருந்த பணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 74.54 மில்லியன் செலுத்த வேண்டியதாக கணக்கிடப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவு கள் மேற்கொள்ளப்படத் தேவையற்றதாக அதிகாரசபையால் இனங்காணப்பட்டிருந்த போதிலும் கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டு கணக்குகளில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில், ஓஷன் வியூ டெவலப்மெண்ட் கம்பனியின் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு ரூபா 1.26 மில்லியன் ஆன போதிலும் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 4.19 மில்லியன் ஆகப் பதிவு செய்யப்பட்டளாயால் நடைமுறைப் பொறுப்பும் ஆண்டிற்கான வருமான வரிச் செலவும் ரூ. 2.93 மில்லியன் தொகையால் மிகைத்துக் கணிப்பிடப் பட்டிருந்தது. | 2024 வரி ஒதுக்கச் சீராக்கம் சரிசெய்யப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியம இல. 37 இன் 28, 86 பந்திகளின் படி ரூபா 130 மில்லியன் தொகையான இழப்பீட்டுத் தொகையைக் கோரி ஓர் கம்பனியால் ஓஷன் வியூ டெவலப்மென்ட் கம்பனிக்கு எதிராக தொடரப்பட்டிருந்த ஓர் வழக்குத் தொடர்பான நிகழத்தக்க பொறுப்புகள், நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் நிதிக்கூற்றுக்களில் குறிப்பாகச் சமர்ப்பிக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (எ) | கம்பனியின் காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதனச் சீராக்கங்களுக்கு முன்னர் செயற்பாட்டு நடவடிக்கைகளின் காசுப்பாய்ச்சல் ரூபா 26.48 மில்லியன் ஆன போதிலும், நிறுவனம் அதை ரூபா 21.15 மில்லியனாகக் குறிப்பிட்டிருந்தது. இதன் விளைவாக, தொழிற்படு மூலதனச் சீராக்கங்களுக்கு முன் செயற்பாட்டு நடவடிக்கைகளால் காசுப்பாய்ச்சல் ரூபா 5.33 மில்லியன் தொகையால் குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தது. | வருடாந்த அறிக்கையில் சீராக்கங்கள் செய்யப்பட்டுள்ளன. | சரியாக நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஏ) | ஓஷன் வியூ டெவலப்மென்ட் பிரைவேட் லிமிடெட்டின் முதலீட்டு ஆதனத்தின் கம்பனியின் அலுவலகம் இயங்கும் பகுதி மீள் மதிப்பிடப்படும் இலாபமான ரூபா 3.75 மில்லியன் தொகையும் ஓய்வூதிய நலன் பொறுப்புகள் தொடர்பான பிற்போடப்பட்ட வரியான ரூபா 0.29 மில்லியனும் கம்பனியின் விரிவான வருமானத்தில் குறிப்பிடப்பட்டிருந்த துடன் நிதிக்கூற்றுக்கள் ஒன்றிணைக்கையிலும் | ஒன்றிணைந்த கணக்குகளில் ஏனைய வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | கூட்டமைப்பின் விபரமான வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட வேண்டும். |

அது கூட்டமைப்பின் விபரமான வருமானத்தில் காண்பிப்பட வேண்டிய போதிலும் கூட்டமைப்பின் ஏனைய வருமானங்களுடன் சேர்க்கப்பட்டுக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் கூட்டமைப்பின் வருமானம் அத் தொகையால் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் மாவட்ட அலுவலகங்களில் கடன் வசூல் குறித்த ஆய்வின் போது 04 மாவட்ட அலுவலகங்களில் 1984-2014 காலகட்டத்தில் வழங்கப்பட்ட கடன்களில் ரூபா 179.6 மில்லியன் தொகையும் 03 மாவட்ட அலுவலகங்களில் 2018-2023 வரை வழங்கப்பட்ட கடனிலிருந்து ரூபா 2,164.66 மில்லியன் தொகையும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டது. மீளப்பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயாது கடன்கள் வழங்கப்பட்டமையாலும் முறையான மீளப்பெறும் நடைமுறை பின்பற்றப்பட்டிராமையாலும் இக் கடன்தொகையை அறவிட இயலாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கடன் அறவீடுகளை அதிகரிப்பதற்காக பல்வேறு முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. | பழைய கடன் மீதிகள் தொடர்பாக பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு அறவிடப்படுவதற்கு இயலுமான முறைகளை அறிமுகப்படுத்த வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் படி, நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து குறித்த ரூபா 104.25 மில்லியன் பெற வேண்டியதாக இருந்ததுடன் அதே அதிகாரசபைக்கு ரூபா 52.51 மில்லியன் செலுத்தப்பட வேண்டியதாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவ் அதிகாரசபையின் மீதி உறுதிப்படுத்தலின் படி, அவ் அதிகாரசபையால் செலுத்தப்பட வேண்டிய தொகை எதுவுமில்லை எனவும் அந் நிறுவனத்திற்கு அறவிடப்பட வேண்டியதாக ரூபா 41.83 மில்லியன் உள்ளமையும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | உரிய பட்டோலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | மீதியைத் தீர்த்துக்கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒப்பந்ததாரர்களிடம் இருந்து பிடித்துவைக்கப்பட்ட மீளச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 204.88 மில்லியன் தொகையில் ரூபா 114.49 மில்லியன் அதாவது 57 சதவீதம் 5 ஆண்டுகளுக்கும் மேலான மீதிகளாகும். | பொறியியல் துறையினருடன் கலந்தாலோசித்து வருமானத்திற்குச் செலவு வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நீண்ட நாட்களாக நிலவிவரும் மீதியை விரைவில் தீர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 01/2021 இல் உள்ள வழிகாட்டுதல்கள் பத்தி 3.4 இன் பிரிவு (ix). | பதில் கடமை நியமனம் ஓர் சிறப்பான சந்தர்ப்பத்தின் போதாக இருக்க வேண்டிய போதிலும் 14 பதவிகளுக்கு, பதில் கடமை நியமனம் 01 முதல் 03 ஆண்டுகள் வரையான நீண்ட காலமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | 3/2022 இன் படி முறையான வகையில் வெற்றிடங்களை நிரப்புவதில் தாமதமடைவதன் காரணமாக பதிற் கடமை, கடமை மேற்கொள்ளல், கடமை மேவுகை அடிப்படையில் வெற்றிடமான பதவிகளின் கடமைகளைச் செய்வதற்கு நேர்ந்துள்ளது. | தகுதியான வெளி அல்லது உள்ளக அதிகாரிகளை முறையாக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2012 சனவரி 01 ஆம் திகதிய அதிகாரசபையின் உள்ளக ஆதன முகாமைத்துவச் சுற்றறிக்கை இலக்கம் 2011/D.A/01 | பயனாளிகளுக்கு காணிகளை வழங்கும் போது உரிய நடைமுறைகளுக்கு மாறாக 35 சந்தர்ப்பங்களில் காணிகள் வழங்கப் பட்டிருந்தமை அவதானிக்கப் பட்டது. அவற்றில் வத்தளை கோங்கிதொட்ட, ருக்மல்கம, சித்ரா பதுமக, தெமட்டகொட மஹாவிலவத்த ஆகிய காணிகளும் உள்ளடக்கப் பட்டிருந்தன. அத்தகைய வழங்கப்பட இயலாத காணிகள் மற்றும் வீடுகளுக் காகவும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப் பட்டிருந்ததுடன் இவற்றில் 17 சந்தர்ப் ங்களுக்காக மதிப்பீட்டுப் பெறுமதியும் காணியின் அளவும் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. மேலும் 46 கடைகளுக்காக ரூபா 100 படி கட்டணங்கள் அறவிடப்பட்டு மேற்குறித்த நடைமுறை களுக்கு மாறாக குத்தகைக்கிடப்பட்டிருந்தன. மேலும், அண்டியுள்ள | அதிகாரசபையின் சட்டத்தின் 75/1 இன் பிரகாரம் அமைச்சருக்குள்ள அங்கீகாரத்தின் படி அவரது அங்கீகாரத்தையும் பணிப்பாளர் சபையின் பரிந்துரையையும் அடிப்படையாகக் கொண்டு காணிகள் வழங்கப்பட்டிருந்தன. | சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கை பின்பற்றப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | காணிகளை வழங்குகையில் 06 பேர்ச்களிலும் குறைவான காணிகள் மாத்திரமே கருத்திற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 13 - 23.9 பேர்ச் வரையான காணிகளும் அண்டிய காணிகளாக வழங்கப்பட்டிருந்தன. | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் அதிகாரசபையினதும் தொகுதியினதும் முறையே ரூபா 1,007 மில்லியன் மற்றும் 916.6 மில்லியன் ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை முறையே ரூபா 1,287 மில்லியன் மற்றும் 1,105.6 மில்லியன் ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம், அதிகாரசபையினதும் தொகுதியினதும் நிதி விளைவுகளில் முறையே ரூபா 280 மில்லியன் மற்றும் ரூபா 189 மில்லியன் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அதிகாரசபையின் ஏனைய வருமானம் ரூபா 1,782 இனால் அதிகரித்தமை முக்கிய காரணமாக இருந்தது.

**2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முன்னுரிமை பகுப்பாய்வு**

| செலவினம்/ வருமானம | 2023 ரூபா | 2022 ரூபா | வேறுபாடு ரூபா | வேறுபாட்டின் சதவீதம் % |
|---|---|---|---|---|
| **மொத்த வருமானம்** | 4,232,437,710 | 2,476,321,102 | 1,756,116,608 | 71 |
| காணி மற்றும் வீடு விற்பனை வருமானம் | 117,919,662 | 42,946,164 | 74,973,498 | 175 |
| ஏனைய வருமானம் | 4,216,019,551 | 2,474,950,097 | 1,741,069,453 | 70 |
| **மொத்த செலவினம்** | 5,198,350,820 | 3,672,585,808 | 1,525,765,012 | 41 |
| வாடகை அடிப்படையில் வாகனம் | 55,330,833 | 45,166,529 | 10,164,304 | 23 |
| சட்ட செலவினம் | 44,140,691 | 23,276,486 | 20,864,205 | 89 |
| வரிக்கு முன் இலாபம்/ நட்டம் | (965,913,109) | (1,196,264,706) | 230,351,597 | 19 |

நேரொத்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் காணி மற்றும் வீடுகளின் விற்பனை வருமானம் 175 சதவீதத்தாலும் ஏனைய வருமானம் 73 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது. மேலும், வாடகை அடிப்படையில் வாகனச் செலவினம் 23 சதவீதத்தினாலும் சட்ட செலவினம் 89 சதவீதத்தினாலும் உயர்வடைந்திருந்தது.

**2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு**

மீளாய்வாண்டின் இறுதியில் அதிகாரசபையின் நடைமுறை விகிதம் 2.7:1 ஆகவும் விரைவு விகிதம் 2.68:1 ஆகவும் இருந்ததுடன் கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது முறையே 2.4:1 மற்றும் 2.37:1 ஆகவும் இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு மாளிகாவத்த மாவட்ட நிலுவைத் தொகையைச் | அதிகாரசபையிடம் | |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலகத்தின் A, B, C வாகனத் தரிப்பிடங்களுக்காகவும் பிரதீபா மாவத்தையில் உள்ள வாகனத் தரிப்பிடங்களுக்காகவும் 32 மாத காலத்திற்காக எந்தவித குத்தகை வாடகைப்பணமும் செலுத்தப்பட்டிராத ஒருவருக்காக மீள 2022 ஒக்டோபர் முதல் 2023 ஆகஸ்ட் வரை வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இக் காலப் பகுதிக்காகக் கிடைக்கப்பெற வேண்டிய ரூபா 2.175 மில்லியன் தொகையை அறவிட்டிருக்கவில்லை. இந்த வாகனத் தரிப்பிடங்களுக்கான பிணை வைப்பாக ரூபா 1.575 மில்லியன் தொகையை அறவிட்டுக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் குத்தகைதாரரால் அதுவும் செலுத்தப் பட்டிருக்கவில்லை. 2023 செப்டம்பர் 09 ஆம் திகதி அனைத்து வாகனத் தரிப்பிடங்களையும் சீல் வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் பிரதீபா மாவத்தையில் உள்ள வாகனத் தரிப்பிடம் 2024 சனவரி 26 ஆம் திகதி வரையிலும் சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி அதிகாரசபை இந்தக் காணியை முறையாக குத்தகைக்கு வழங்கும் அடிப்படையில் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்து வருமானத்தை உழைத்திருக்கவில்லை. | செலுத்தாமையால் அனைத்து வாகன நிறுத்துமிடங்களும் சீல் வைக்கப்பட்டுள்ளன. மீள விலை மனுக்கள் கோரப்பட்ட போதிலும் முதலாவது விலை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இரண்டாவது விலை தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | உள்ள சொத்துக்கள் வருமானம் உழைக்கப்படும் வகையில் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகார சபையின் மாளிகாவத்த மாவட்ட அலுவலத்தின் கீழ் இயங்கும் 03 பிரதீபா விழா மண்டபங்கள், குத்தகை அடிப்படையில் வழங்கப்படுவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்த போதிலும் 2006 பெறுகை வழிகாட்டுதல்களைப் பின்பற்றாது குத்தகைக்கு வழங்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தது. மேலும், முகத்துவார பிரதீபா விழா மண்டபத்தின் அசல் குத்தகை ஒப்பந்தத்தை இரத்துச் செய்து மீண்டும் வேறு தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பான கோவைகளைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்குமாறு பல தடவைகள் கோரிய போதிலும், அக் கோவையைச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகத்துவார பிரதீபா மண்டப பழுதுபார்ப்பிற்காக ரூபா 8.6 மில்லியன் தொகையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. ஆகையால் முகாமைத்துவம் குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது. | அதிகாரசபைக்கு உரிய சொத்துக்களை வருமானம் ஈட்டும் வகையில் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்த வேண்டும். |
| (இ) | அதிகாரசபையின் சொத்து முகாமைத்துவப் பிரிவால் அதிகாரசபை யிடம் உள்ள காணிகள் தொடர்பாக வழங்கப்பட்ட காணி எண்ணிக்கையின் படி, 2019 முதல் 2022 வரையான காலப்பகுதியின் போது அருகிலுள்ள 300 காணித் துண்டுகளும், 1503 அங்கீகரிக்கப்படாத காணித் துண்டுகளும், 2618 வெற்றுக் காணித்துண்டுகளும் | 149 காணித் துண்டுகளில் 5.81 ஹெக்டேயர் மதிப்பீடு செய்யப்பட்டு அறிக்கை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு பகுதி விற்பனை செய்யப்பட்டுள்ளது. | அதிகாரசபைக்குச் சொந்தமான வெற்று/அண்மித்த/ அங்கீகரிக்கப்படாத காணி பற்றிய விரிவான தகவல்கள் |

| | | | |
|---|---|---|---|
| | குறைவாகக் காணப்பட்டன. மேலும் 2023 செப்தெம்பர் வரையில் மேலும் 61 வெற்றுக் காணித்துண்டுகள் குறைவாகக் காணப் பட்டன. அவ்வாறு குறைவடை வதற்குக் காரணமான விடயங்கள் குறித்து விபரமான தகவல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு அதிகாரசபைக்கு இயலாது போனதுடன் இது கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய நிலைக்கு உட்பட்டிருந்தது. | எஞ்சிய பகுதி விற்பனை செய்யப்படுவதற்கும் மற்றைய காணி மதிப்பிடப்பட்டு விற்பனை செய்யப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | அதிகாரசபைக்கு சொந்தமான கொழும்பு 10, டார்லி வீதியில் உள்ள 01 ஏக்கர் 26.5 பேர்ச்சஸ் காணியில் குடியிருப்பு மற்றும் வணிக வளாகத்துடன் கூடிய கலப்பு அபிவிருத்தித் திட்டத்தை நிர்மாணிப்பதற்காக பொது கேள்வி கோரப்படாது 2005 நவம்பர் 09 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தில் வெளிநாட்டு நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. அந் நிறுவனத்துடன் 2006 யூன் 23 திகதி ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் படி காணியின் பெறுமதி அரசாங்க தலைமை மதிப்பீட்டாளரின் ரூபா 650 மில்லியன் மதிப்பீட்டில் அறவிடப்படுவதற்கும் 06 ஆண்டுகளில் செயற்திட்டத்தை நிறைவேற்றப்பட்டதை அடுத்து ரூபா 162 மில்லியன் தொகையான பங்கிலாபத்தை அதிகாரசபைக்கு வழங்குவதற்கும் உடன்பட்டிருந்தது. எனினும், கம்பனியில் உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ளாது 2006 ஆம் ஆண்டில் இதிலிருந்து ஒதுங்கியிருந்ததுடன் அச் செயற்பாட்டை வேறு வெளிநாட்டுக் கம்பனி ஒன்றிடம் ஒப்படைக்கப்படுவதற்கு பெயரிடப்பட்டிருந்தது. பணத்தை செலுத்துவதற்கு முன், 983 ஆம் இலக்க உறுதியின் மூலம் 2016 மே 5 ஆம் திகதி இக் காணியின் உரிமை அப் புதிய கம்பனிக்கு அதிகாரசபையால் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் படி, ரூபா 712 மில்லியன் வெளிநாட்டு நாணயத்தில் அதிகாரசபைக்கு செலுத்தப்பட வேண்டி இருந்தது. எனினும் அதற்கு மாறாக அக் கம்பனி காணியைக் கூறாக்கி 2, 3, 4 என 3 கூறுகளாக்கி ஓர் தனியார் கம்பனிக்கு அடமானம் வைத்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 800 மில்லியன் தொகையை 2016 மே 05 ஆம் திகதி குறித்த தனியார் வங்கியின் இரு காசோலைகள் மூலம் உள்நாட்டு நாணயத்தில் அதிகாரசபைக்கு செலுத்தியிருந்தது. மேலும், கணக்காய்வுத் திகதி வரையில் இக் கம்பனியால் திட்டமிடப்பட்ட அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | டார்லி வீதியில் 01 ஏக்கர் மற்றும் 26.5 பேர்ச்களில் கலப்பு அபிவிருத்தி வீடமைப்புத் திட்டத்தை நிர்மாணிப்பதற்காக ஜேர்மன் நாட்டு தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஒரு கூட்டு உடன்பாட்டு உடன்படிக்கை 2006 யூன் 23 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டு 4 ஆம் 5 ஆம் தொகுதிகள் 975 ஆம் இலக்க விற்பனை உறுதியின் மூலம் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. 2006 ஆம் ஆண்டின் போது அக் கம்பனியின் மாற்றப்பட்டிருந்ததுடன் 2007 ஆகஸ்ட் 10 ஆம் திகதி 1, 2, 3 ஆகிய துண்டுகள் 983 ஆம் இலக்க விற்பனை உறுதியின் மூலம் கம்பனிக்கு வழங்கப்பட்டு 2016 மே 05 ஆம் திகதி ஓர் மேலதிக உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் 07 வருடங்கள் கடந்திருந்தும் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிராமையால் 975, 983 விற்பனைப் பத்திரங்கள் அதிகாரசபையால் இரத்து செய்யப்பட்டிருந்தன. இக் காணியின் 1 முதல் 5 வரையிலான பகுதிகளையும் மற்றொரு காணியின் ஓர் பகுதியையும் | செயற்திட்டங்களுக்காக நிறுவனங்களைத் தேர்ந்தெடுக்கையிலும் காணிகளை விடுவிக்கையிலும் முறையான வழிமுறைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டியதுடன் அதிகாரசபைக்குப் பாதகமற்ற நிபந்தனைகளை உள்ளடக்கி உடன்படிக்கைகளுக்கு உள்ளாக வேண்டியதுடன் போதியளவு செயற்திட்ட மேம்பாட்டை மேற்கொள்ள வேண்டியதுடன் மேற்குறித்த விடயங்கள் தொடர்பில் முறையான கவனத்தைச் செலுத்தாத அதிகாரிகளுக்கு எதிராக முறையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இதற்கிடையில் கம்பனியால் வேறு மூன்றாவது கம்பனி ஒன்றிற்கு 2017 ஆம் ஆண்டில் இக் காணியின் 05 ஆம் இலக்கப் பகுதியை உறுதியின் மூலம் விற்பனை செய்திருந்ததுடன் அக் கம்பனியால் இவ் உறுதி ஓர் அர வங்கி அடமானம் வைக்கப்பட்டு ரூபா 950 மில்லியன் கடன் தொகை பெறப்பட்டிருந்தது. அதிகாரசபையால் அவ் விற்பனை உறுதிப் பத்திரம் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன், அம் மூன்றாவது கம்பனியால் அதிகாரசபைக்கு எதிராக உச்ச நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் 3 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் வழக்குத் தீர்ப்பு வழங்கப்படும் வரை காணியின் உரிமை அதிகாரசபையால் அம் மூன்றாவது கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. மேற்குறித்த விடயங்களின் படி அதிகாரசபையின் சட்ட அதிகாரங்களுக்கு அமைவாகச் செயற்பட்டிராமையும் அதிகாரசபையுடன் உடன்படிக்கையுடன் உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொள்ளும் தரப்பினர் களுக்குப் பக்கச்சார்பாக தமது கடமைகளைச் செய்திருப்பதுவும் மேலும் அவதானிக்கப்பட்டது. | இணைத்துள்ள 3011 ஆம் இலக்க திட்டத்தின் 01 ஆம் இலக்க (819) ஆம் இலக்கக் காணி 2007 ஒக்டோபர் 31 ஆம் திகதி தனியார் கம்பனிகளால் ஓர் அரச வங்கியில் ரூபா 950 மில்லியனிற்கு அடமானம் வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஓர் தனியார் கம்பனி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருந்ததுடன் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மற்றுமொரு வழக்கையும் தாக்கல் செய்திருந்ததுடன் அவ் வழக்குத் தீர்ப்புகளுக்கு எதிராக மற்றொரு வழக்கை சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் தொடர்ந்திருந்தது. | |
| (உ) | அதிகாரசபைக்கு சொந்தமான நாவல பறங்கியா கும்புர என்ற பெயருடைய 05 ஏக்பர் 10 பேர்ச் காணி அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2004 ஆம் ஆண்டின் போது 03 வருடங்களுக்குள் வீடமைப்பை மேற்கொள்வதற்காக ஓர் தனியார் கம்பனியுடன் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் அக் காணியின் 2003 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தின் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 75 மில்லியனுக்கு அக் கம்பனிக்கு நிபந்தனைகளுடன் சீவிய உரித்தில் காணி கையளிக்கப்பட்டிருந்தது. 2004 ஆம் ஆண்டின் போது 2003 ஆம் ஆண்டின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதிக்கு காணி ஒப்படைக்கப்பட்டதன் காரணமாக அதிகாரசபைக்கு கிடைக்கத் தவறிய மதிப்பீட்டு வருமானம் ரூபா 46.5 மில்லியனாகக் காணப்பட்டது. எவ்வாறெனினும், கம்பனியால் உடன்படிக்கையிடப்பட்டவாறு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்குப் பதிலாக ஒப்படைக்கப்பட்ட காணியின் 29.44 பேர்ச் ரூபா 196.5 மில்லியனுக்கு வேறு கம்பனி ஒன்றிற்கு 2006 ஆம் ஆண்டின் போது விற்பனை செய்யப்பட்டிருந்தது. மேலும், | நாவல, கிரி மண்டல் மாவத்தையில் அமைந்துள்ள 05 ஏக்கர் மற்றும் 10 பேர்ச்சஸ் அளவிலான பரங்கிய கும்புற காணியில் வீடமைப்புச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஓர் தனியார் கம்பனியுடன் 2004 செப்டெம்பர் 21 ஆம் திகதி அதிகாரசபை ஓர் உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டிருந்ததுடன் 2003 ஆகஸ்ட் 21 ஆம் திகதி அரசாங்க மதிப்பீட்டாளரால் ரூபா 75 மில்லியன் தொகைக்கு நிபந்தனை யுடனான உறுதியின் மூலம் காணி ஒப்படைக்கப்பட்டிருந்தது. இம் மதிப்பீடு 02 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும். | செயற்திட்டத்திற்காக நிறுவனங்களைத் தேர்ந்தெடுக்கையிலும், காணிகளை வழங்குகையிலும் முறையான வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டியதுடன் அதிகாரசபைக்கு நட்டம் ஏற்படாத வகையிலான நிபந்தனைகளை உள்ளடக்கி உடன்படிக்கைகளை ஏற்படுத்த வேண்டியதுடன் போதிய செயற்திட்ட மேற்பார்வைகள் மேற்கொள்ளப்பட்டு மேற்குறித்த விடயங்கள் தொடர்பாக முறையான |

| | | | |
|---|---|---|---|
| | கம்பனியால் எஞ்சிய காணியை ஓர் தனியார் வங்கியில் அடமானம் வைத்து ரூ.697.5 மில்லியன் தொகை பெறப்பட்டிருந்தது. 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பிரிவு 8 (1) பிரிவின் கீழ், 2020 யூன் 26 ஆம் திகதி அதிகாரசபையால் உறுதி இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் கம்பனி இதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தது. இவ்வாறே வேறோர் நபராலும் மேற்குறித்த காணி தனது சொந்தக் காணி என உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக மாவட்ட நீதிமன்றத்தில் மற்றொரு வழக்கைத் தொடர்ந்திருந்தார். அதன்படி, அதிகார சபையால் செயற்திட்டங்களுக்காக காணியை வழங்குகையில் முறையான பெறுகை நடைமுறை பின்பற்றப் பட்டிராமை, தேவையான நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டு சரியாக உடன்படிக்கைகள் தயாரிக்கப்படாது முறையான கண்காணிப்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | முன்மொழியப்பட்ட செயற்திட்டப் பணிகள் நிறைவேற்றப்படாமையாலும் காணியின் ஓர் பகுதி ஓர் தனியார் வைத்தியசாலைக் கம்பனிக்கு விற்பனை செய்யப்பட்டமையாலும், சீவிய உரித்து உறுதி இரத்துச் செய்யப்பட்டு, உரிமை அதிகார சபைக்குக் கையகப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக தனியார் கம்பனி ஒன்றால் அதிகாரசபை உள்ளிட்ட 04 நிறுவனங்களுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இது 2024 ஒக்டோபர் 11 ஆம் திகதி விசாரணைக்கு உட்படுத்தப்பட உள்ளது. மேலும் குறித்த காணிக்கான உரிமையை பெற்றுத்தருமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றில் மற்றுமொருவர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். தற்போது இக் காணி ரூபா 05 இலட்சம் மாத வாடகையில் ஓர் தனியார் நிறுவனத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. | கவனத்தைச் செலுத்தியிராத உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | மாளிகாவத்தை இலக்கம் 4051 வளாகத்தின் 49/சீ தொகுதிக் காணியின் 12 பேர்ச் மற்றும் எல்விட்டிகல மாவத்தையின் 117 தோட்டத்தின் 7.25 பேர்ச் அளவிலான 02 காணிகளும் சுய தொழிலாளிகளின் சங்கத்திற்கு 2014 ஆம் ஆண்டின் போது முறையே மதிப்பீட்டுப் பெறுமதியில் 1 சதவீதமான பெயரளவுப் பெறுமதியான ரூபா 240,000 இற்கும் ரூபா 180,000 இற்குமான குத்தகை அடிப்படையில் வழங்கப் பட்டிருந்தது. அமைச்சரவைப் பத்திர இலக்கம் 98/641/21/062 இன் பிரகாரம் இதற்கு அமைச்சரவையின் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், அதிகாரசபையின் சுற்றறிக்கை இலக்கம் | காணி வழங்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப் பட்டிராமையால் எதிர்காலத்தில் குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்படுவதற்கு அல்லது அரசாங்க மதிப்பீட்டில் குத்தகை அடிப்படையில் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரசபைக்கு உரிய காணிகளை இலாபமற்ற முறையில் வழங்கிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2011/தெக/03 இன் படி, வருடாந்த வாடகை, காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியில் 4 வீதமும், 2 வருடங்களிற்கு ஒரு தடைவயும் 5 வருடங்களிற்கு ஒரு தடவையான மதிப்பீட்டுப் பெறுமதியின்படி குத்தகைத் தொகை மீட்கப்பட வேண்டிய போதிலும் இதற்கு மாறாக உடன்படிக்கையிடப் பட்டிருந்தது. மேலும், குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ள குறிப்பிட்ட நோக்கங்களுக்காக காணி பயன்படுத்தப்பட்டிராமையால் குத்தகை உடன்படிக்கையை இரத்துச்செய்யும் படி சட்டமா அதிபரின் கடிதம் இலக்கம் 11/01/05/05 மற்றும் 2017 ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம் குறிப்பிடப்பட்டிருந்தது. 2019 ஜூன் 26 மற்றும் 2023 செப்தெம்பர் 15 ஆம் திகதிகளில் அந்த குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் 2023 மார்ச் 21 முதல் மீள இந்த நிறுவனத்திற்கே குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறே, போலி குத்தகை உடன்படிக்கை ஒன்றை அதிகாரசபை கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருந்ததுடன் அத்தகைய ஓர் அமைப்பு ஒன்று இருப்பதற்கு கணக்காய்விற்கு எந்தவித தகவலும் வெளிவரவில்லை. மேலும் பௌதீக ரீதியான ஆய்வில் இக் காணியில் நவீன பாணியில் உணவகம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதன் படி, அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகள் அதிகார சபைக்கு பாதகமான முறையில் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (எ) | அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி, சீவிய உரித்தில் காணி விடுவிக்கப்படுவதாயின் இது ஓர் வீட்டை நிர்மாணிப்பதற்காக மட்டுமே இருக்க வேண்டிய போதிலும் இரன்பொகுனுகம வீட்டுத் திட்டத்தின் இல. 166 தொகுதி இல. 02 மற்றும் 03 இல் உள்ள 60 பேர்ச் காணி. அமைப்பு திட்டம் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்காக இறையில் குத்தகைக்கு 20 வருட காலத்திற்காக 2012 ஆம் ஆண்டின் போது மாதம் ஒன்றிற்கு ரூபா 30,000 இற்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இதனை அடுத்து இதற்கு அண்மையில் 1.3 பேர்ச் ரூபா 650 ஆன குத்தகைக்கு அதனுடன் சேர்க்கப்பட்டு வழங்கப்பட்டிருந்த போதிலும் இது உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. மேலும், 2015 ஆம் ஆண்டின் போது குத்தகைக் காலம் 10 ஆண்டுகளிற்கு நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 5 ஆண்டுகளிற்கு ஒரு முறை குத்தகை அறிக்கைகள் பெறப்பட்டு குத்தகை வாடகை | குத்தகைதாரர் 2015 ஆம் ஆண்டு காணியைக் கையகப்படுத்துகையில் விருத்தியடையாத நிலையில் இருந்தமையால் காணி அப்போதைய மதிப்பீட்டுப் பெறுமதிக்குக் கோரப்பட்டிருந்தது. அன்றைய திகதியில் மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | அதிகாரசபைக்கு உரிய காணிகளை இலாபமற்ற முறையில் வழங்கிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

திருத்தப்பட்டிருக்கவில்லை. 2021 ஜனவரி முதல் திசெம்பர் வரை மாதாந்தம் ரூபா 71,500 படி குத்தகை வாடகை வசூலிக்கப்பட்டிருந்தது. மூலக் குத்தகைதாரரின் கோரிக்கையின் பேரில், இந்த காணிகளை வேறொருவருக்கு இறையில் குத்தகைக்கு வழங்கப்படுவதற்கு 17/2022 ஆம் இலக்க 2022 திசெம்பர் 24 ஆம் திகதிய பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன் படி, அதிகாரசபையின் சட்டத்திற்கு மாறாக, காணி இறையில் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் 2022 யூன் 07 ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்ட ரூபா 73.5 மில்லியன் மதிப்பீட்டு அறிக்கைக்கு பதிலாக குத்தகைக்குப் பெறப்படுகையில் 2015 ஆம் ஆண்டில் காணியின் விருத்தியடையாத காணியானமையால் 9 வருடங்களுக்கு முன்னரான அதாவது 2015 ஆம் ஆண்டு காணி மதிப்பீட்டு அறிக்கை, மதிப்பீட்டுத் திணைக்களத்தால் கோரப்பட்டிருந்ததுடன் அம் மதிப்பீட்டு பெறுமதி கிடைக்கப்பெற்றிருக்க வில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | அதிகாரசபைக்குச் சொந்தமான மாளிகாவத்தை அடுக்குமாடிக் குடியிருப்பில் கொ/ந 104 கட்டத்தில் உள்ள தொகுதி இல. 65 இல் 21.5 பேர்ச்சில் நிர்மாணிக்கப்பட்ட ஓர் கட்டிடத்திற்காக குத்தகை மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளப்படாது அதிகார சபையின் விலைக் குழுவால் தீர்மானிக்கப்பட்ட மாதாந்த வாடகைத்தொகையான ரூபா 3,900 படி பெயரளவுக் குத்தகை வாடகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 1999 ஆகஸ்ட் 19 ஆம் திகதி முதல் 2000 ஆகஸ்ட் 19 ஆம் திகதி வரை குத்தகை உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. அமைச்சரவைப் பத்திர இல. 98/641/21/062 இன் படி, அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளை மத ஸ்தலங்களிற்கு, புண்ணியத்தலங்களிற்கு, கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் வழங்குகையில் முன் அங்கீகாரத்தைப் பெற்றிருக்க வேண்டிய போதிலும் அவ் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. 2000 ஆகஸ்ட் 19 ஆம் திகதி உடன்படிக்கை முடிவடைந்திருந்த போதிலும், உடன்படிக்கையை மீள புதுப்பிக்காமையாலும் குத்தகை வாடகையைச் செலுத்தாமையாலும் கட்டிடத்தின் வெற்று உரிமையை மீள அதிகாரசபையிடம் ஒப்படைக்குமாறு சட்ட அறிவித்தல் அனுப்பிவைக்கப்பட்ட போதிலும் அவ்வாறு ஒப்படைக்கப்பட்டிராததுடன் அதிகாரசபையின் | நிலுவையான பணத்தைச் செலுத்துமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் நியாயமான பதிலை வழங்கியிருக்க வில்லை. | குத்தகை மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்ளாது கட்டிடத்தை குத்தகை வாடகைக்கு வழங்கிய உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகாரம் இன்றி 2000 ஆம் ஆண்டின் போது கட்டிடத்தின் ஒரு பகுதி இடித்து அகற்றப் பட்டிருந்ததுடன், முன்பள்ளி நிர்வாக நடவடிக்கைகளிற்காக் புதிய கட்டிடம் ஒன்று குத்தகைதாரரால் நிர்மாணிக்கப் பட்டிருந்தது. 1999 ஆகஸ்ட் முதல் 2004 யூன் வரை நிலுவையான குத்தகை வாடகை அக் கட்டிட நிர்மாணிப்பிற்காகச் செலவிடப் பட்ட தொகைக்கு ஈடுசெய்யப்பட்டிருந்த துடன் 2004 - 2011 வரையிலான வாடகையை 2011 யூலை 19 ஆம் திகதி மீள 2013 மார்ச் வரையான வாடகை, 2013 மே வரையிலும் கொடுப்பனவுகள் தவிர்க்கப்பட்ட நிறுவனத்திற்கு 23 வருடங்களாக எந்தவித தேடுதல்களும் மேற்கொள்ளப்படாது இக் கட்டிடம் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட ஓர் உடன்படிக்கை 2018 ஆம் ஆண்டு மீண்டும் முடிவுறுத்தப்பட்டு அதன் நிர்வாகத்தால் இந்த முன் பாடசாலைக்கு 30 வருட காலத்திற்கு குத்தகைக்குப் பெறப்படுவதற்கு கோரப்பட்டிருந்த துடன் இதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திடம் இருந்து பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் படி ரூபா 177,000 மாதாந்த குத்தகை வாடகை அறவிடப்பட வேண்டிய போதிலும் 2023 ஏப்ரல் வரை ரூபா 3,900 வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் முன் பள்ளியின் கோரிக்கையில் 2023 முதல் ரூபா 30,000 அறவிடப்படுவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. மதிப்பீட்டுக் குத்தகை வாடகை அறவிடப்பட்டிராமையால் 2018 முதல் 2023 வரை ரூபா 10.28 மில்லியன் தொகையான நட்டம் அதிகாரசபைக்கு ஏற்பட்டிருந்தது. | | |
| (ஐ) | 2020 திசெம்பர் 15 ஆம் திகதிய அமப/20/1381/306/057 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, 7.6 ஹெக்டேர் அளவிலான யக்கல வரெல்லவத்த காணியில் 12 மாடிகளைக் கொண்ட 154 வீடுகளைக் கொண்ட வீடமைப்புத் தொகுதியை நிர்மாணிப் பதற்கான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருந்தது. கள ஆய்வின்போது, இக் காணியை சீரமைப்பது, செயற்திட்டத்தைத் திட்டமிடுவது மற்றும் மதிப்பீட்டைத் தயாரிப்பது மற்றும் காணி வழியாகச் செல்லும் உயர் அழுத்த மின்கம்பி அமைப்பை அகற்றுவதற்குத் தீர்மானித்திருந்ததுடன் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டின் இறுதி யில் இச் செயற்திட்டத்திற்காக ரூபா 169.7 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் | தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இல. 3/2022 இன் படி நிர்மாண வேலைகளை ஆரம்பிக்க வேண்டாம் என அறிவுறுத்தல் கள் வழங்கப்பட்டுள்ளன. | திட்டத்தின் படி எதிர்காலத்தில் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு உள்ள இயலுமை குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும். |

அத்திவாரமிடல் மாத்திரம் இடப்பட்டு செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்த மையால் இது பொருளாதாரமற்ற செலவாக அவதானிக்கப்பட்டது.

## 3.2 செயற்பாட்டு திறமை இன்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சொய்சாப்புற அலுவலகத்திற்குரிய குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட 22 கடைகள் இருந்த போதிலும் இவற்றில் 13 குத்தகைதாரர் அல்லாத வேறு நபர்களுக்கு குத்தகைதாரரால் உபகுத்தகைக்கு வழங்கப் பட்டிருந்தது. இது தொடர்பாக அதிகார சபை அறிவித்திருந்த போதிலும் எந்தவித நடவடிக்கை யும் அதிகார சபையால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கடை இல. 1,2,3 மொறட்டுவ கூட்டுறவுச் சங்கத்திற்கு 1999 மார்ச் 01 ஆம் திகதி முதல் ரூபா 195 படி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் மதிப்பீடு புதுப்பிக்கப்பட்டு தற்போதைய வாடகையை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு பால் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்காக 1998 சனவரி 01 ஆம் திகதி மாதாந்த வாடகை ரூபா 65 படி வழங்கப்பட்டிருந்தது. இக் கடைக்காக 2023 நவம்பர் 10 ஆம் திகதி வரையான 11 வருடங்களுக்கும் 7 மாதங்களுக்கு மாக வாடகை செலுத்தப்பட்டிருக்க வில்லை. அதிகாரசபை அது தொடர்பாக எந்தவித நடவடிக்கை யையும் எடுத்திருக்கவில்லை. அதிகாரசபைக்குரிய தெஹிவளை முதல் மொறட்டுவ வரையான காணிகளில் அத்துமீறிக் குடியிருப்பாளர்கள் குடியிருப்ப துடன் அக்காணிகளை மதிப்பீடு செய்து முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது ரூபா 500 படி அறவிடப்பட்டிருந்த போதிலும் அதுவும் முறைப்படி அறவிடப் பட்டிருக்கவில்லை. | உப குத்தகை வழங்கலை உறுதிப்படுத்தியதை அடுத்து அவர்களுக்கு ரூபா 12,000 படி மீளக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. பால் விற்பனை நிலையம் கையகப்படுத்தப்பட்டு மீள அவர்களுக்கே ரூபா 12,000 இற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. காணி கையேற்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன | அதிகாரசபைக்கு உரித்தான ஆதனங்கள் தொடர்பாக போதிய கண்காணிப்பு ஒன்று தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2015 - 2019 ஆம் ஆண்டுகளின் போது அதிகாரசபையால் செயற்படுத்தப்பட்ட மாதிரிக் கிராமச் செயற்திட்டத்தின் மீளாய்வாண்டு வரையில் பூர்த்தி செய்யப்படாத 2150 கிராமங்களில் 39,815 வீடுகள் காணப்பட்டதுடன் ரூபா 190.63 மில்லியன் செலவில் 681 வீடுகள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது பூர்த்தி | மாதிரிக் கிராமங்கள் மற்றும் நீரோ கிராமங்களுக்காக 2019 ஆம் ஆண்டின் பின்னர் ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை . | விடமைப்புச் செயற்திட்டங்களின் நிர்மாணிப்புகள் குறித்த காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டு குடியிருப்பாளர்களுக் கு நலன்களை |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தன. 2017 - 2019 ஆம் ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்ட இந்திய வீடமைப்பு உதவித் திட்டத்தின் கீழ் 25 கிராமங்களில் 114 வீடுகள் பகுதி அளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது ரூபாய் 103 மில்லியன் செலவில் 143 வீடுகள் நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 6.38 மில்லியன் செலவில் 29 வீடுகள் மாத்திரம் கிராம சக்தி வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது ரூபா 554 மில்லியன் செலவில் 1605 வீடுகள் நிர்மாணிக்கப் படுவதற்கு திட்டமிடப் பட்டிருந்த போதிலும் ரூபா 48.8 மில்லியன் செலவில் 57 வீடுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்திசெய்யப் பட்டிருந்தன | | வழங்க வேண்டும் |
| (இ) | புத்தளம் மாவட்டத்தில் செயற்படுத்தப் பட்டிருந்த வீடமைப்பு செயற்திட்டங்களில் உங்களுக்கு வீடு நாட்டிற்கு நாளை எனும் செயற்திட்டத்தில் மீளாய்வாண்டின் போது 25 வீடுகள் நிர்மாணிக்கப் படுவதற்கு 4 கட்டங்களின் கீழ் ரூபா 12 மில்லியன் செலவில் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 4 கட்டங்களும் வழங்கப்பட்டு முற்றாக பூர்த்தி செய்யப்பட்டிருந்த 9 வீடுகள் காணப்பட்டதுடன் ரூபா 8.785 மில்லியன் செலவிடப் பட்டிருந்த போதிலும் எஞ்சிய 16 வீடுகளின் நிர்மாணிப்பு பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. கிராம சக்தி மாதிரி கிராமங்களில் உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2017 - 2019 காலப்பகுதியின் போது ரூபா 172.7 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 34.1 மில்லியன் அதாவது 20 சதவீதம் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக வீடமைப்புப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. மேலும் நீரோ கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டின் போது 3 ஏக்கர் காணியில் ரணவிரு கிராமத்தை நிர்மாணிப்பதற்கு 40 நலன் பெறுனர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்ததுடன் இவர்களில் 21 பேரினால் அந்தக் காணி வேறு நபர்களுக்கு விற்பனை செய்யப் பட்டிருந்ததுடன் குடியிருக்கும் 19 பேருக்கு வேறு காணிகள் இருந்தன. இக்காணிகளுக்காக எந்தவித பணத் தொகையும் அறவிடப்பட்டிராததுடன் வீடமைப்பிற்காக வழங்கப்பட்ட கடன் தொகையில் 12 பேரின் நிலுவைத் தொகையான ரூபா 2.97 அறுவிடப்படுவதற்கு முடியா திருந்தது. | மாதிரிக் கிராமங்களுக்காகவும் நீரோ கிராமங்களுக்காகவும் 2019 இன் பின்னர் ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை . | வீடமைப்புச் செயற்திட்டங்களின் நிர்மாணப் பணிகள் குறித்த கால வரையறைக்குள் நிறைவேற்றப்பட்டு குடியிருப்பாளர்களுக்கு நலனை வழங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அதிகாரசபைக்கு எதிராகவும் அதிகார சபையாலும் தொடரப்பட்ட வழக்கு நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 44.14 மில்லியன் தொகை வழக்கறிஞர் கட்டணங்களுக்காக செலவிடப்பட்டிருந்தன. இதில் சிங்கப்பூர் சர்வதேச தீர்வு நீதிமன்றத்தில் உள்ள வழக்கிற்காக ரூபா 6.97 மில்லியன் தொகையும் ராகம லவன்யா ஹயிட்ஸ் வீடமைப்புச் செயல்திட்டத்திற்கான வழக்கறிஞர் கட்டணங்களுக்காக ரூபா 2.23 மில்லியன் தொகையும் உள்ளடங்கி இருந்தது. ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த ஊழியர்களால் தொழில் பிணக்கு சபையில் 852 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் இதில் 349 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தன. கொழும்பு மற்றும் மாத்தறை பிணக்கு சபையால் வழங்கப்பட்ட வழக்குத் தீர்ப்பின் படி 49 வழக்குகளுக்காக ரூபா 13.8 மில்லியன் நட்டஈடாக வைப்புச்செய்வதற்கு அதிகாரசபைக்கு நேர்ந்திருந்தது. மேலும் மாத்தறை தொழில் பிணக்கு சபையில் மேலும் 518 வழக்குகள் தொடரப்பட்டிருந்த துடன் 81 வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் மீண்டும் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. இவ்வாறு தொடரப்பட்ட வழக்குகளுக்கு உரிய ரூபா 2,616 மில்லியன் நட்டஈட்டுத் தொகை அதிகார சபையால் கோரப்பட்டிருந்தது. முகாமைத்துவத்தால் எடுக்கப்பட்ட செயற்திறனற்ற தீர்ப்புகள் காரணமாக இத்தகைய நிலை ஏற்பட்டிருந்த போதிலும் மீண்டும் ஆட்சேர்ப்பு நடைமுறை பின்பற்றப்படாது ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டமை, செயற்திட்டத்திற் காக முறையான வகையில் முதலீட்டாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிராமை, காணி கட்டிடங்கள் குத்தகைக்கு வழங்கப்படுகையில் அத்தியாவசியமான நிபந்தனை களை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிராமை போன்ற நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டிருந்தன. | பம்பலபிட்டிய தொடர்மாடிக் குடியிருப்பு புனரமைப்புச் செயற்திட்டத்திற்குரிய சிங்கப்பூர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கிற்காக அதிக பணத்தொகை செலவிடப்பட்டிருந்தது. | அதிகாரசபைக்கு எதிராகவும் அதிகாரசபையாலும் தொடரப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில் முகாமைத்துவம் தீர்மானங்களை எடுத்தல் வேண்டும். |
| (உ) | குருநாகல் மாவட்ட காரியாலயத் திற்கு உரிய மகோ கிராம எழுச்சி பிரதேசத்தில் உள்ள 14ஏ, 15ஏ, 17ஏ ஆகிய 03 இடங்களில் பயன்படுத்தப்படாது கைவிடப்பட்ட நிலையில் சேதத்திற்கு உட்பட்டிருந்ததுடன் அதிகார சபைக்குரிய 05 வீடுகளும் மூடிய நிலையில் இருந்தன. | மகோவில் உள்ள 05 வீடுகள் பிரதேச செயலகத்திற்குரித்தாவதுடன் 19/ ஏ அரச மதிப்பீட்டின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. டொனமூர் கூடுதலான கேள்வி யில் | அதிகாரசபைக்கு உரிய ஆவணங்கள் தொடர்பாக போதிய கண்காணிப்பை மேற்கொண்டு முறைப்படி உடன்படிக்கையை |

| | | | |
|---|---|---|---|
| | 16 ஏ, 19 ஏ இடப்பகுதிகள் முறையே ரூபா 100 இற்கும் 1,200 இற்கும் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த துடன் மதிப்பீட்டு அறிக்கை ஒன்றும் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா 21,500 படியான மாதாந்த வாடகைக்கு உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்படாது தொழிற்திறன் பயிற்சி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த 25 ஏ கட்டிடத்திற்காக 2023ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 2.64 மில்லியன் நிலுவையாகக் காணப்பட்டது மேலும், குருநாகல் லேக்சைட் தோட்டத்தில் 53 பேர்ச் காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 3 உத்தியோகபூர்வ வீடுகளும் 38 பேர்ச் 02 வெற்றுக்காணித் துண்டுகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் நிக்கவெரட்டிய வன்னிகமவில் உள்ள 2 ரூட் 24 பேர்ச் காணியும் கட்டிடங்களும் இயந்திரத் தொகுதிகளும் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் எந்தவித வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 21 ஏக்கரிலான மாவத்த கம டெனார் தோட்டம் கொடுப்பனவுப் பத்திரத்தின் மூலம் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அதில் அத்துமீறி இறப்பர் பால் வெட்டப்பட்டு தனியார் நிறுவனத்தின் வாகனத் தரிப்பிடம் நடாத்தப்பட்டிருந்த போதிலும் வீடமைப்புச் செயற்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்டிருந்தது | ஏற்படுத்த வேண்டியதுடன் குத்தகை மதிப்பீட்டு அறிக்கை பெறப்படாது இடங்களை வழங்கிய உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஊ) | தொடர்மாடிக் குடியிருப்புகள் பழுதுபார்த்தல், நீர் செயற்திட்டம் மற்றும் பாலங்களின் நிர்மாணிப்பு போன்ற 53 செயற்திட்டங்களுக்காக அதிகாரசபையால் ரூபா 312.68 மில்லியன் முற்பணத் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அது 2023 திசெம்பர் 31-ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறு வழங்கப்பட்ட தொகையில் ரூபா 106.24 மில்லியன் வழங்கப்பட்டு 3 – 4 வருட காலமும் ரூபா 41.91 மில்லியன் வழங்கப்பட்டு 4 – 5 வருட காலமும் ரூபா 164.53 மில்லியன் வழங்கப்பட்டு 5 வருடங்களுக்கு மேலான காலமும் கடந்திருந்தது. இத்தொகையில் ரூபா 254.36 மில்லியன் அதாவது 81 சதவீதம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப் பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத் தொகையைத் தீர்ப்பதற்கு அமைச்சு தலையிட்டதன் காரணமாக கலந்துரையாடல் நடவடிக்கைகளுக்காக தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. | முற்பணத தொகையை காலரீதியாகத் தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | அதிகாரசபைக்கு உரிய இல. 302 திட்டத்தின் கட்ட இல. 1 காணியின் 159 பேர்ச் காணிப் பகுதி 2006 திசெம்பர் 14 ஆம் திகதி 8207 ஆம் இலக்க குத்தகை உடன் படிக்கையின் மூலம் 50 ஆண்டு காலத்திற்காக முகத்துவார வெங்கடேஸ்வர கோயிலுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் வருடாந்தம் குத்தகை வாடகை ரூபா 1.15 மில்லியனானதுடன் 05 வருடங்களுக்கு ஒரு முறை 2.5 சதவீதத்தால் அதிகரிக்கப்படும் வகையில் வாடகை அறவிடப்பட வேண்டும். எனினும் கோயிலுக்காக ஒதுக்கப்பட்ட காணியின் 39.7 பேர்ச் அளவில் அத்துமீறிய குடியிருப்பாளர்கள் இருந்தமையால் 2007 முதல் 2013 யூலை மாதம் வரை குத்தகை வாடகைக் கொடுப்பனவு விடுவிக்கப் பட்டிருந்தது. இதன் காரணமாக 2013 நவம்பர் 28 ஆம் திகதி அறவிடப்பட வேண்டிய ரூபா 19.3 மில்லியன் நிலுவை வாடகை தொகை தொடர்பாக 2023 ஆகஸ்ட் 11 ஆம் திகதி 13/2023 பனிப்பாளர் சபையின் தீர்மானத்தின் படி ரூபா 3 மில்லியன் மாத்திரம் மாதாந்தம் ரூபா 125,000 படி 02 வருடங்களில் அறுவிடப்படுவதற்கு இருந்தது. இக்காலப்பகுதியின் போது காணியில் இருந்து 75 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் வாடகை உடன்படிக்கை ஏற்படுத்தப்படுகையில் வைப்புத் தொகை பெறப்பட்டிராததன் காரணமாக நிலுவை வாடகை அறவிடப்படுவதற்கு இயலா திருந்தது. மேலும் SEI/A/4/34 ஆம் இலக்க 1993 யூலை 12 ஆம் திகதிய அரசாங்க காணி ஒதுக்கீட்டிற்கான வழிகாட்டல்களின் சனாதிபதி சுற்றறிக்கையின் படி 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகை அதிகரிப்பு 150 சதவீதத்திற்கு குறைவடைய லாகாது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபை அச்சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. அதிகார சபைக்குரிய வெற்றுக்காணியில் கோயிலுடன் தொடர்புடைய மற்றுமோர் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு வந்திருந்த போதிலும் அதிகாரசபை இவ் அனுமதியற்ற நிர்மாணிப்பு தொடர்பாக எந்தவித நடவடிக்கை யையும் எடுத்திருக்கவில்லை. | உடன்படிக்கையின் படி கட்டிட நிர்மாணிப்பிற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அத்துமீறிய குடியிருப்பாளர்கள் இருந்த காலப்பகுதிக்காக ரூபா 3 மில்லியன் செலுத்தப்படுவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தது. ஏப்ரல் மாதம் முதல் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். | வாடகை உடன் படிக்கைகள் மேற்கொள்ளப்படுகையில் வைப்புத் தொகையைப் பெற்றிராத சுற்றறிக்கை உடன்படிக்கையின் படி வாடகைத் தொகையை அதிகரிக்கப்பதற்கு நடவடிக்கை எடுத்திராத உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | அதிகாரசபையால் வீடமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டங்களை செயற்படுத்துதல் காணிகள், வீட்டு விற்பனை, கடைகள் மற்றும் வீடுகளை குத்தகைக்கு/ வாடகைக்கு வழங்குதல் மக்கள் மண்டபம், வாகனத் தரிப்பிடங் களைப் பேணுவதனால் பாரிய வருமானங்களை உழைக்கக் கூடியதாக இருக்கை யில் அவ்வாறு செய்யப்படாது 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் செப்தெம்பர் மாதம் வரை அறுவிடப்பட்டிருந்த வீட்டுக் கடன் மற்றும் வட்டித் தொகையான ரூபா 2,868 மில்லியனில் ரூபா் 1,669 மில்லியன் அதிகாரசபையின் மீண்டெழும் செலவினத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. மேலும், ரூபா 139.9 மில்லியன் கடனை அறவிடும் முகவர்களுக்காக செலுத்தப்பட்டிருந்தது. இதன்படி, சேகரிக்கப்பட்ட கடன் மற்றும் வட்டித் தொகையில் மீள வீட்டுக் கடனை வழங்குவதற்காக ரூபா 415 மில்லியன் செலவிடப் பட்டிருந்ததுடன் அது அறவிடப்பட்ட கடன் மற்றும் வட்டித் தொகையில் 14 சதவீதமான வீழ்ச்சியாகக் காணப்பட்டது. | அதிகாரசபையின் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினத்திற்காக திரைசேரியில் இருந்து பணம் கிடைக்கப் பெறாமையால் கடனைச் சேகரிப்பதன் மூலம் குறித்த செலவினம் தீர்க்கப்படுகின்றது. எதிர்காலத்தில் உள்ளக ரீதியாக உழைக்கும் பணத்திலிருந்து மேலதிக கடனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரசபையின் வருமானத்தை அதிகரிப்பதற்காக செயற்திறனாகச் செயற்பட்டிராத உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுகாற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | ஆதனங்களை விற்பனை செய்கையில் அறுவிடப்பட்டுவரும் நிர்வாகக் கட்டணம் 15 சதவீதம் முதல் 7.5 சதவீதம் வரை 2023 ஏப்ரல் 25 ஆம் திகதி முதல் குறைப்பதற்காக 2023 யூன் 13 ஆம் திகதி பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் இதன் காரணமாக அதிகார சபைக்கு ரூபா 5.78 மில்லியன் வருமானம் கிடைக்கப் பெறாது போயிருந்தது. மேலும் அகற்றப்படுகையிலான அறவீடுகள் ஒரே தடவையில் அல்லது தவணை முறையில் அறவிடப்படுவது தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட காரணிகள் மாற்றப்பட்டு எஞ்சிய தொகையை செலுத்துவதற்காக வட்டி வீதத்தை 16 சதவீதத்திலிருந்து 12.5 சதவீதம் வரை குறைக்கப்பட்டிருந்தது. இத்தகைய தீர்மானம் காரணமாக வெளிநபர்களுக்கு மாத்திரம் சாதகமான வகையிலும் வழிவகை செய்யப்பட்டு அதிகாரசபைக்குப் பெற வேண்டிய வருமானம் கிடைக்கத் தவறியிருந்தது | அரசாங்க மதிப்பீடு மற்றும் மேலும் 15 சதவீதம் சேகரிக்கப்படுவதன் மூலம் சந்தை தொகையைப் பார்க்கிலும் ஆதனங்களின் விலை அதிகரித்தமையால் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தில் 7.5 சதவீதம் வரை குறைக்கப்பட்டிருந்தது. | அதிகாரசபைக்குப் பாதகமான வகையில் அல்லாத தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டியதுடன் பாதகமான தீர்மானங்களை எடுத்த நபர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஒ) | அதிகாரசபையின் மாளிகாவத்தை அலுவலகத்தால் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த கடைகளின் எண்ணிக்கை 109 ஆகும். இதில் 39 | இவை பழைய மீளமைக்கப்பட்ட காணிகளாகும். இதில் 72 காணிகளில் ஆரம்ப | நீண்ட காலமாக வாடகைத் தொகையைத் திருத்துவதற்கான |

| | | | |
|---|---|---|---|
| | கடைகளுக்காக ரூபாய் 100 - ரூபா 1,000 வரையான குத்தகை வாடகையும் 3 கடைகளுக்கு ரூபா 100 ஐப் பார்க்கிலும் குறைந்த வாடகை குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மேலும் 30 கடைகள் ரூபா 1,000 - ரூபா 3,000 இற்கு இடைப்பட்ட வாடகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது இக்கடைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டு 24 வருடங்களிலிருந்து 65 வருடங்கள் வரையான காலங்கள் கடந்திருந்த போதிலும் மதிப்பீட்டைப் புதுப்பிக்கப்பட்டுக் குத்தகைப் பணம் திருத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் 83 கடைகள் குத்தகை வாடகை கொடுப்பனவு நிலுவைத் தொகை 1 முதல் 333 மாதங்களுக்கிடையே இருந்தது. அதாவது 1 மாதம் முதல் 27 வருடங்களும் 9 மாதங்கள் வரை. காலத்திற்கானதாகக் காணப்பட்டது. மேலும் 36 கடைகளில் ஒரு வருடத்திற்கும் மேலதிகமான காலம் நிலுவையாக இருந்த குத்தகை வாடகையின் கூட்டுத்தொகை 16,409,514 ஆக காணப்பட்டது. இவ்வாறே நிலுவையாக இருந்த குத்தகை வாடகை கூட்டுத் தொகை ரூபா 10.8 மில்லியன் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்குத் தவறிய 05 நபர்கள் காணப்பட்டனர் இது தொடர்பாக அதிகாரசபை எந்தவித நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை | உரிமையாளர்கள் அல்லது அவர்களின் வாரிசுகள் வாழ்ந்து வருகின்றனர். அவற்றில் 32 இன் வாடகைத் தொகை செலுத்தப் பட்டிருக்கவில்லை. இவை புதிதாக குத்தகைக்கிடப் படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நடவடிக்கைகளை எடுத்திராத தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஓ) | அதிகாரசபை, தனியார் முதலீட்டாளர்களுடன் இணைந்து 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற் திட்டங்களில் பள்ளே கலே, ஜல்தர கட்டம் II செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் கவிரத்ன ரெபிஸ் ரெசிடென்சிஸ், கன்தான துனுமடலாவ விலாஸ், குண்டசாலை ஹைடஸ் பார்க் போன்ற வீட்டுத் திட்டங்களின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இச் செயற்திட்டங்களுக்காக வழங்கப் பட்டிருந்த காணிகளுக்காக அபிவிருத்தியாளர்களால் செலுத்தப் பட்டிருந்த முப்பணத் தொகையான ரூபா 180 மில்லியன் 10 வருட காலம் கடந்திருந்த போதிலும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கமும் தனியாரும் ஒன்றிணைந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தனியார் முதலீட்டாளர்களுடன் செயற் படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் ஆகும். இவற்றில் ஹன்தான வீடமைப்புச் செயற்திட்டம் கட்டம II மற்றும் கட்டம் III - புவியியல் ஆய்வு அறிக்கை இதுவரையில் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அதன் நிபந்தனைகள் மற்றும் பரிந்துரைகளுக்கு இணங்க மீள செயற்திட்டத்தை ஆரம்பிப் பதற்கும் விலைத் தளம்பல்களுக்குமான அங்கீகாரத்திற்கு அமைச்சரவையின் விஞ்ஞாபனம் ஒன்று மீளச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. யக்கல சியனா உயன சொபா வீடமைப்புச் செயற்திட்டங்கள் | திட்டமிடப்பட்ட படி செயற்திட்டத்தை விரைவாகச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அதன் நலனை விரைவாகப் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | மற்றும் கலுகல பல்லேகலே ரீஜன்ஸி பார்க் வீடமைப்புச் செயற்திட்டம் கட்டம் I மற்றும் கட்டம் II, ஜல்தர வீடமைப்புச் செயற்திட்டம் கட்டம் II, ஹோமகம மவுன்ட் கிளிபர்ட் வீடமைப்புச் செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளன. வாத்துவ – நுககஹ தனத்தவத்த வீடமைப்புச் செயற்திட்டம், ராகம லாவண்யா வீடமைப்புச் செயற்திட்டம் - எஸ் க்ரோ கணக்கின் பணம் பெறப்படுவதற்கு வழக்குத் தொடரப்பட்டுள்ளது. மிகுந்துபுற வீடமைப்புச் செயற்திட்டம் - மீளச் செயற்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் 2021.11.30 ஆம் திகதி கிடைக்கப் பெற்றுள்ளது. |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை 2,164 ஆனதுடன் உள்ளபடியான ஊழியர்களின் எண்ணிக்கை 1,697 ஆகும். வெற்றிடம் 467 ஆகும். | உள்ளகப் பதவி உயர்வுகள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | உள்ளக ரீதியான வெற்றிட நிலையிலான பதவிகளை உடனடியாக நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

## 4. கணக்களிப்புப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்க ஒரு பிரதியுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபை 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளிற்கு உரிய வருடாந்த அறிக்கையை 2023 ஒக்டோபர் 26 ஆம் | 2019, 2020 வருடாந்த அறிக்கைகள் மொழிபெயர்ப்பிற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கை அறிவுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2030 நிலைபேறான அபிவிருத்திக்கான நிரற்பத்திரத்தின் பிரகாரம் அதிகார சபையால் தமது நோக்கெல்லைக்கு உரித்தான நிலைபேறான அபிவிருத்தி நோக்க இலக்குகள் மற்றும் சுட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை | நிலைபேறான அபிவிருத்தி நோக்க இலக்கம் 11 இன் பிரகாரம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தனது இலக்குகளை இனங்காண்பதற்கு ஆரம்பித்துள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு இலக்குகளை எய்துவதற்காகவும் அவற்றின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கும் சுட்டிகளை இனங்கண்டுகொள்ள வேண்டும். |